ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2317/67 - 2023 පෙබරවාරි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.02.02
*2317/67 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (X) (ஈ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ.டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 1437 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் (ஐசிபிடி) தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக, அதற்கான சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ளதும், இதற்கான அட்டவணை II இன் நிரல் I குறித்துரைக்கப்பட்டதுமான பட்டத்தின் அளிப்புக்கு இட்டுச்செல்கின்றதாக அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்திசெய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக இல. 363, டி.எஸ் சேனாநாயகா வீதி, கண்டி (கண்டி கிளை) இல் அமைந்துள்ள கிளையாக இன்டநஷனல் கொலிஜ் ஒப் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட்டை ஏற்றங்கீகரிக்கின்றேன்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் (ஐசிபிடி) - கண்டி கிளை ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களுக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை, இலங்கை, கண்டி, டி. எஸ். சேனானாயகா வீதி, 363 ஆம் இலக்கத்தில் மட்டுமே நடாத்துதல் வேண்டும்.

1A - PG 6198 — 286 (2023/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் (ஐசிபிடி) - கண்டி கிளை ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட வேண்டிய ஐந்து வருட (5) மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை முனைவதற்கு ஏற்றங்கீகரிக்கின்றது.

3. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் (ஐசிபிடி) - கண்டி கிளை ஆனது, ஆகக்குறைந்த 120 திறமை மட்டங்களுடன் (SLQF மட்டம் 6) பூர்த்திசெய்த, வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது -

அ. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில், வர்த்தக பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ; அல்லது

ஆ. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில், ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அல்லது அற்குச் சமமான குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்புக் கற்கை நெறியொன்றுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

4. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிடெட் (ஐசிபிடி) - கண்டி கிளை ஆனது, ஆகக்குறைந்த 120 திறமை மட்டங்களுடன் (SLQF மட்டம் 6) பூர்த்திசெய்த, மென்பொருள் பொறியியலில் கௌரவ இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்துக்கு இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது -

அ. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில், பௌதீக விஞ்ஞான துறையில் ஒரே தடவையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் ; அல்லது

ஆ. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில், ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அல்லது அற்குச் சமமான குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்புக் கற்கைநெறியொன்றுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி | பிபிஎம் கௌரவ |
| மென்பொருள் பொறியியலில் (கௌரவ) விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (மென்பொருள் பொறியியல்) |

கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த (பா.உ.)
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, சனவரி 30.

EOG 02-0005

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.